**கவனிக்க.**- 2018.07.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2081 - 2018 ජූලි මස 20 වැනි සිකුරාදා - 2018.07.20

*2081 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1021 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1020 | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் சட்ட மூலம் 2018, யூலை 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மக்கள் வங்கி (திருத்தம்) சட்ட மூலம் 2018, யூலை 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2018, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2018, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,

கொழும்பு 8,

2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அவரால் ஒழுங்கு செய்யப்பட்ட அத்துடன் 2013.06.28 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாணத்தின் மாநகர சபைகளின் அதிகாரப் பிரதேசங்களில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான துணைவிதி 2017.09.26 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் வாசிக்கப் பட்டு அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ஸ்ரீயானி பத்மலதா,
செயலாளர்,
நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல்,
உள்ளூராட்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய, மகளிர் விவகார,
கூட்டுறவு, வியாபார மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து
மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக,
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு,
சப்பிரகமுவ மாகாணம்.

*2018, யூன் 11.*

*7 - 498/1*

---

## சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அவரால் ஒழுங்கு செய்யப்பட்ட அத்துடன் 2013.06.28 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட சபரகமுவ மாகாணத்தின் நகர சபைகளின் அதிகாரப் பிரதேசங்களில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான துணைவிதி 2017.09.26 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் வாசிக்கப் பட்டு அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ஸ்ரீயானி பத்மலதா,
செயலாளர்,
நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல்,
உள்ளூராட்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய, மகளிர் விவகார,
கூட்டுறவு, வியாபார மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து
மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக,
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு,
சப்பிரகமுவ மாகாணம்.

*2018, யூன் 11.*

*7 - 498/2*

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அவரால் ஒழுங்கு செய்யப்பட்ட அத்துடன் 2013.06.28 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாணத்தின் பிரதேச சபைகளின் அதிகாரப் பிரதேசங்களில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான துணைவிதி 2017.09.26 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் வாசிக்கப் பட்டு அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ஸ்ரீயானி பத்மலதா,
செயலாளர்,
நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல்,
உள்ளூராட்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய, மகளிர் விவகார,
கூட்டுறவு, வியாபார மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து
மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக,
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு,
சப்பிரகமுவ மாகாணம்.

*2018, யூன் 11.*

*7 - 498/3*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### மேல் மாகாண அரசாங்க சேவையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பசேவை வகுப்பு 2 தரம் II பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

மேல் மாகாண அரசாங்க சேவையில் வெளிக்கள/அலுவலக சேவை வகை 1 இல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II பதவிக்கு தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் நடாத்தப்படும். இவ்வறிவித்தலில் காட்டப்பட்டவாறு தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படும் திகதி**

தற்போது ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள 5 வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்காக இப்பரீட்சை நடாத்தப்படுகிறது. தற்போது நிலவும் வெற்றிடங்களுக்கு அல்லது எதிர்காலத்தில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும். அத்துடன் நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படும் திகதி மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**03. சேவை நிபந்தனைகள்**

(i) இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியக் கொடுப்பனவுடையதுமாகும். உமக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) இப்பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையோர் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட நன்னடத்தைக் காலத்திற்குட்பட்டு இச்சேவைக்கு நியமிக்கப்படுவர்.

(iii) பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் மேல் மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பசேவையின் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மற்றும் பதவியுயர்த்தும் நடைமுறையில் காட்டப்பட்டுள்ளபடி வினைத்திறன்காண் தடை தாண்டல் மற்றும் அரச கரும மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியெய்துதல் அவசியம்.

(iv) இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசினதும் தாபன விதிக்கோவைக்கும், மேல் மாகாண அரசாங்க சேவையின் செயற் படிமுறை விதிப் பிரமாணங்களுக்கும், மேல் மாகாண சபையினது நிதிப் பிரமாணங்களுக்கும், மேல் மாகாண ஆளுநரினால் பிறப்பிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கும், கட்டளைகளுக்கும், மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் காலத்திற்குக் காலம் பிறப்பிக்கப்படும் வேறு ஒழுங்கு விதிகளுக்கும், கட்டளைகளுக்கும், அமைச்சு மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கும் ஏற்ப செயற்படல் சேண்டும்.

**04. சம்பள அளவுத் திட்டம்**

இந்நியமனத்திற்குரிய சம்பள அளவுத்திட்டம் 2016.02. 25 ஆம் தேதியிட்ட பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 ன் I ஆம் அட்டவணைக்கேற்ப மதாந்தம் ரூபா. 36,585 - 10 x 660 - 10 x 775 - 15 x 930 - ரூபா 65, 440/- (MN -6-2016) சம்பள படிமுறை உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் செயற்படும் தினத்திலிருந்து உமக்கு சம்பளம் வழங்கப்படும்.

**05. கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு பொதுத் தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.
(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் ஆக்குறைந்தது 03 வருடங்களாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல்.
(iii) வயதெல்லை - 21 வயதிற்குக் குறையாத 35 வயதிற்கு மேற்படாதவாறு இருத்தல். ( தற்போது அரச/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)
(iv) இப்பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கு அவசியமான இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அனைத்து தகுதிகளையும் 2018. 08.17 ஆந் திகதிக்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சிறந்த நடத்தையுடையவராயிருத்தல் அவசியம்.

**06. கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் அவசியம்**

1. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது பட்டமளிக்க தகுதிபெற்ற நிறுவனமொன்றில் கணினி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

2. i. பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது பட்டமளிக்க தகுதிபெற்ற நிறுவனமொன்றில் கணினி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமாகக் கொண்டமைந்த பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் (ஆக குறைந்தது 1/3 பகுதி பாடப்பரப்பு கணினி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் கொண்டிருத்தல் வேண்டும் )

மற்றும்

ii. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது பட்டமளிக்க தகுதிபெற்ற நிறுவனமொன்றில் கணினி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான பட்டப்பின் டிப்ளோமா சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

3. i. பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது பட்டமளிக்க தகுதிபெற்ற நிறுவனமொன்றில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

ii. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது பட்டமளிக்க தகுதிபெற்ற நிறுவனமொன்றில் கணினி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான பட்டப்பின் முதுகலைப் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

4. i. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதான தேசிய தொழிற்பயிற்சித் திறன் (NVQ) தகைமை ஏழு (07) இனை கணினி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் விடயத்தில் கொண்டிருத்தல்.

மற்றும்

ii. சம்மந்தப்பட்ட துறையில் 02 வருட சிறந்த அனுபவத்தை கொண்டிருத்தல்.

**07. பரீட்சை**

திறந்த போட்டிப் பரீட்சையானது மூன்று வினாத்தாள்களைக் கொண்டது. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகள் பெற்றிருத்தல் அவசியம் என்பதுடன் மொத்தப் புள்ளிகளின் 50 % ஐ பெறவேண்டும். தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். போட்டிப் பரீட்சை முடிவுகளுக்கேற்ப புள்ளிகளினடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

| வினாத்தாள் | புள்ளிகள் | காலம் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. நுண்ணறிவு | 100 | 01 மணித்தியாலம் | 40 |
| 3. பொது அறிவு | 100 | 01 மணித்தியாலம் | 40 |

**08. பரீட்சைக்குரிய பாடத்திட்டம்**

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | இவ் வினாத்தாளானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அடிப்படைகள், கணினி கட்டமைப்பு, இயங்குதளம்/ மென்பொருட்கள் (சொல்முறை, விரிதாள், தரவுதளம், வரைகலை மற்றும் அலுவலகப் பயன்பாட்டிலுள்ள மென்பொருட்கள்) வன்பொருட்கள், இணையவளி அரச நடைமுறைகள், பகுப்பாய்வு, வடிவமைப்பு மற்றும் செயற்படுத்தலும் பராமரித்தலும் தரவுத் தளத்தினை வடிவமைத்தலும் பரமரித்தலும், மின்னஞ்சல், இணையம் என்பவற்றை வடிவமைத்தலும் பராமரித்தலும் கணினி வலயமைப்பை வடிவமைத்தல், பாரமரித்தல் மற்றும் தொடர்பாடல். |
| 2. நுண்ணறிவு | இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான சிந்தனை, பகுத்தாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் திறன் ஆகியவற்றை அளவிடுவதற்காக 50 பல் தேர்வு வினாக்கள் மற்றும் சிறு வினாக்கள் ஆகியவற்றைக் கொண்டது. |
| 3. பொது அறிவு | பகுத்தறிவுத் திறன், தர்க்கரீதியான புரிந்துணர்வு, விளக்கமளிக்கும் திறன், மற்ற சூழ்நிலைகளுக்கு பயன்படும் திறன் மற்றும் முடிவுக்கு வருகை ஆகியவை தொடர்பிலான அறிவினை அளவிடுவதற்காகவும் எண், மொழி மற்றும் உருமாற்ற அமைப்பு தொடர்பாக வழங்கப்படும் சிக்கல்களுக்கு பதிலளிப்பது தொடர்பிலும் பல் தேர்வு வினாக்கள் மற்றும் சிறு வினாக்கள் வழங்கப்படும் (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவேண்டும்.) |

**09. 01 பரீட்சை நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நகரம் - கொழும்பு**

**10. பரீட்சைக் கட்டணம்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் மேல் மாகாண சபைக்கு பரீட்சைக் கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும். இப்பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 600 ஆகும். அக்கட்டணத்தினை, மேல் மாகாண சபை வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு வரவு வைத்து மேல்

மாகாணத்திலமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகமொன்றில் பணமாகச் செலுத்தி உமது பெயரில் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் ஒட்டவும். இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. முத்திரைகளோ காசுக் கட்டளைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**11. விண்ணப்பிக்கும் முறை**

I. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து பரீட்சார்த்தி தமதுகையெழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04 வரை முதல் பக்கத்திலும், இலக்கம் 05 தொடக்கம் உள்ள பகுதிகள் ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு விண்ணப்பம் தயாரித்தல் வேண்டும். உரிய முறைப்படி தயாரிக்கப்படாத, பூர்த்தி செய்யப்படாத, உரிய திகதிக்குக் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

II. விண்ணப்பப் படிவத்தினைத் தயாரிக்கும் போது தலைப்பிலுள்ள பெயரினை தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியமாகும்.

III. பூரத்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2018.08.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழு, இலக்கம் 109, பிரதான வீதி, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பசேவையின் வகுப்பு 2 தரம் II பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018" என குறிப்பிடப்படல் வேண்டும்.

IV. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டவாறு தயாரிக்கப்பட்டு, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு குறித்த திகதியில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைக்குத் தோற்ற மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் இடமளிக்கப்படும். முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்பட்டு விளம்பரத்திற்கேற்ப உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என பரீட்சிக்கும் வேளையில் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

V. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அதை தெரியப்படுத்தும் அறிவித்தலொன்று மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தில் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 02 நாட்கள் கழிந்த பின்னும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அதுபற்றி மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கு தெரியப்படுத்தல் வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி, பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதி, விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச் சீட்டின் நிழற் பிரதி, அடையாள அட்டை எண் ஆகியவற்றுடன் மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

VI. விண்ணப்பத்திலும் அனுமதி அட்டையிலும் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ளோர் தமது திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் பெற்ற அலுவலரினால் அத்தாட்சிப்படுத்த முடியும். ஏனையோர் சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரச பாடசாலையொன்றின் அதிபர், (ரூ. 498,960 அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர்), விகாரையொன்றின் விகாராதிபதி, மதகுரு, முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர் ஆகிய ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

**12. பரீட்சைக்கு தோற்றுதல்**

I. சரியான முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற முடியாது.

II. பரீட்சை நாடத்துவது தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் அமைத்து நடத்தல் வேண்டும். அவற்றை மீறும் பட்சத்தில் மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்படுவர்.

**13. விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**

தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ் வருவனவற்றிலொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட் தேசிய ஆள் அடையாள அட்டை

II. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**14. தவறான தகவல்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரியொருவருக்கு உரிய தகைமைகள் இல்லையென தெரியவரின், பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியொருவர் தெரிந்துகொண்டே தவறான தகவல்களை வழங்கியது அல்லது ஏதாவதொரு முக்கிய தகவலை மறைத்தது தெரியவரின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட இடமுண்டு.

**15. பரீட்சை முறை**

I. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும்.

II. விண்ணப்பதாரியொருவர் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

16. இப்பரீட்சையில் தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேறுகளை மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் விண்ணப்பதாரிகளுக்கு தெரியப்படுத்தல், தபால் மூலமாகவோ அல்லது மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தின் மூலமோ மேற்கொள்ளப்படும்.

17. இவ்விண்ணப்பங் கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட/உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்குரியதாகும்.

18. இவ்வர்த்தமான அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில அறிவித்தல்களில் வேறுபாடுகள் காணப்படுமிடத்து சிங்கள அறிவித்தல் வலிதுடையதாகும்.

19. இவ்வறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பம் மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தளத்திலும் வெளியிடப்படும்.

எம். ஜீ. ஏ. திலகரத்தினா,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழு,
மேல் மாகாணம்.

மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,
இல. 109,
பிரதான வீதி,
பத்தரமுல்லை.
2018, யூலை 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை**
**வகுப்பு 2 ஆம் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

(அலுவலக உபயோகத்திற்கு)

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் - 2

தமிழ் - 3

ஆங்கிலம் - 4

(பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..............................................................................
(Ex : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..............................................................
(Ex : GUNAWARDHANA, H.M.S.K)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..............................................................................

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..............................................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ..............................................................................

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :
i. சிங்களத்தில்/தமிழில் : ..............................................................................

ii. ஆங்கில பெரிய எழுத்துக்களில் : ..............................................................................

2.4 தொலைபேசி இலக்கம் : ..............................................................................

3.0 3.1 பால் -

ஆண் - 0

பெண் - 1

(பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

3.2 நிரந்தர வதிவிட மாவட்டம் - கொழும்பு - 1
கம்பஹா - 2
களுத்துறை - 3
(பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

3.3 பிரதேச செயலாளர் அலுவலகம்:……………………………………………………………………………

3.4 மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம் : ………………………………………………………………

3.5 இலங்கைப் பிரசையா என்பது - பிறப்பினாலா அல்லது பதிவினாலா : …………………………………………

4.0 4.1 விவாக நிலை : விவாகமானவர் - 2, விவாகமாகாதவர் - 1
(பொருத்தமான எண்ணைக் கூட்டில் எழுதவும்)

4.2 பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :

4.3 விண்ணப்பம் முடிவுத் திகதியில் வயது : வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

5.0 விண்ணப்பங்கள் கோரப்பட்ட அறிவித்தலின் இல. 06 இற்கமைய கல்வித் தகைமைகள் :

(i) ……………………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………………

6.0 நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா ?
(அடைப்புக்குறியினுள் புள்ளடி இடுக.) ஆம் இல்லை

7.0 பற்றுச்சீட்டின் விபரம் -
i. பணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம் ……………………………………………………

ii. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் ……………………………………………………………

iii. தொகை ……………………………………………………………

பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும்.

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(i) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

(ii) இவ்வுறுதிப்படுத்தல் பொய்யானது என தெரியவரின் நான் நியமனத்திற்கு தகுதியற்றவனாவேன் என நான் அறிவேன்.

(iii) மேலும், மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பேன் என்றும், பரீட்சை நிபந்தனைகளுக்கு தகுதியற்றதாக நிரூபிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு நான் உடன்படுகின்றேன்.

(iv) தகவல்கள் எதுவும் பின்பு மாற்றப்பட மாட்டாது.

………………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:………………………………………

9.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ……………………………………………………………………………… என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தியுள்ளார் எனவும் அதன் பற்றுச்சீட்டினை இதனுடன் இணைத்துள்ளார் எனவும், எனது முன்னிலையில் …………………………… ஆந் திகதி அவரது கையொப்பத்தினை இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

………………………………………
அத்தாட்சிப்படுத்துபவரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :………………………………………

பதவி:………………………………………

விலாசம்:………………………………………

திகதி:………………………………………

7 - 506

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.